| | |
|---|---|
| வேலூர் மா.ஆ.நி<br>**VELLORE DRB** | கூட்டுறவுச் சங்கங்களின்<br>**மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், வேலூர்**<br>கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>சத்துவாச்சாரி, வேலூர் மாவட்டம் - 632 009. |

**விளம்பர எண். 03 /2020** **நாள். 14.03.2020**

# மறு அறிவிப்பு

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் கூட்டுறவு நிறுவனங்களில் (கூட்டுறவு நகர வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள், பணியாளர் சங்கம் மற்றும் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி) காலியாக உள்ள **59 உதவியாளர்/எழுத்தர்/ மேற்பார்வையாளர்** பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கான **எழுத்துத்தேர்வு 14.06.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி** வரை மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் வேலூரால் நடத்தப்பட உள்ளது. இத்தேர்விற்குத் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் (www.drbvellore.net) என்ற இணையதளம் வாயிலாக (Through Online Only) மட்டுமே வரவேற்கப்படுகின்றன. இணையவழி விண்ணப்பங்களைப் **பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய கடைசி நாள் 14.04.2020 பிற்பகல் 5.45 மணி வரை.**

இத்தேர்விற்கான குறைந்தபட்ச கல்வித்தகுதி, கூட்டுறவு பயிற்சி, வயது வரம்பு, இடஒதுக்கீடு, இனச்சுழற்சி, தேர்வுக்கான பாடத்திட்டம், தேர்வுக்கட்டணம், தேர்வு நடைப்பெறும் நாள்,தேர்வுக்கட்டணம் செலுத்தும் முறை, சம்பள ஏற்றமுறை மற்றும் பிற விவரங்களுக்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் வேலூரின் இணையதளத்தில் (www.drbvellore.net) வெளியிடப்பட்டுள்ள விரிவான அறிவிக்கையைக் காணவும்.

இப்பணியிடங்களுக்கு ஏற்கனவே வெளியிடப்பட்ட விளம்பரம் எண். 02/2019-ன்படி 30.08.2019 முதல் 30.09.2019 வரை மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் வேலூருக்கு விண்ணப்பக் கட்டணம் செலுத்தி விண்ணப்பித்தவர்கள் **மீண்டும் விண்ணப்பித்தால் மட்டுமே** அவர்களது விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். ஏற்கனவே **விண்ணப்பக் கட்டணம் செலுத்தி விண்ணப்பித்தவர்கள மீண்டும் விண்ணப்பக் கட்டணம் செலுத்த தேவையில்லை**. அவர்கள் ஏற்கனவே செலுத்திய விண்ணப்பக் கட்டண ரசீது எண்ணை மீண்டும் ஒருமுறை பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம். **அவர்களது பழைய விண்ணப்பம் எக்காரணத்தைக் கொண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.** அவர்கள மீண்டும விண்ணப்பிக்காவிட்டால் ஏற்கனவே செலுத்திய பணம் திருப்பி அளிக்கப்படமாட்டாது .

**இணைப்பதிவாளர் / தலைவர்**
கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட
ஆள்சேர்ப்பு நிலையம்,
வேலூர்.